செ. கு. எண்:175 நாள்: 08.11.2017

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் அறிக்கை – 8.11.2017

2004–ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பு படைப்பாற்றலை ஒரு காரணியாக கொண்டு நிலையான வளர்ச்சியை எய்திட "படைப்பாக்க நகரங்கள் தொடரமைப்பை" உருவாக்கியது. பல்வேறு சிறப்புகளுக்காக உலகெங்கிலும் இதுவரை 180 நகரங்கள் இப்பட்டியலில் சேர்க்கப்பட்டு உள்ளன.

இசைத்துறையில் சிறந்த பங்களிப்பை வழங்கி வருவதை பாராட்டி யுனெஸ்கோ அமைப்பு "சிறந்த படைப்பாக்க நகரங்கள் தொடரமைப்பு" பட்டியலில் சென்னையை தற்போது சேர்த்துள்ளது என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இதற்காக யுனெஸ்கோ அமைப்பிற்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இசைத்துறையில் சென்னையின் வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் யுனெஸ்கோ அமைப்பு பாராட்டி அங்கீகரித்திருப்பது நமக்கெல்லாம் பெருமைக்குரிய விஷயமாகும். சென்னை வாழ் மக்களுக்கும், அனைத்து இசைத்துறை கலைஞர்களுக்கும், இத்தருணத்தில் எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**